بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா 24/02/2017

(26 Jamadul Awwal 1438 Hijira)

## The Cult of the Hindus/ ஹிந்துத்துவ ஆராதனை



### Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூரா.்.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

**“அவர்கள் தங்களுக்காக வல்லமையுடையவையென்று அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்களை எடுத்துக் கொண்டுள்ளார்கள். அப்படியல்ல! தங்களை அவர்கள் வணங்கியதையும் (அத்தெய்வங்கள்) நிராகரித்து விடவும் அவர்களுக்கு விரோதியாக மாறிவிடவும் செய்வார்கள்” (19: 82,83)**

மௌரிஷியஸில் இன்று பொது விடுமுறையாகும். (மகா சிவராத்திரி) ஒரு வேளை வேறு இராஜ்யங்களிலும் இதைப்போன்றேயாகலாம். அவர்கள் மகா சிவராத்திரி கொண்டாட்டத்தின்பாலாகும். என் ஹிந்து நண்பர்கள் என்னிடம் பணிவுடன் கேட்டுக் கொண்டனர், இன்றைய உங்களின் வெள்ளிக்கிழமை பேருரையில் எங்களின் மூன்று தெய்வங்களாகிய **“பிரம்மா சிவன் விஷ்ணு”** வைக்குறித்து பேசிக் கொள்ள வேண்டும் என.

எல்லா காரியங்களுக்கும் மூலகாரணமாகவும் அனைத்தையும் படைத்தவனாகவும் விஷ்ணுவை ஹிந்து புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றது. ஈஸ்வரனாகவும் எல்லாம்வல்ல இறைவனாகவும் அதில் விஷ்ணுவை எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஹிந்து மும்மூர்த்திகளில் முதல் நபராகிய பிரம்மாவும், விஷ்ணுவின் வல்லமையை ஒத்துக் கொள்வதாக காணலாம். வேதசாகித்தியங்களில் மூன்று வகைப்பட்ட பண்புகளைக் கொண்ட மும்மூர்த்திகளில் இரண்டாவதாகிய விஷ்ணுவுக்கு பிரம்மாவைப் போன்றே மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றது. ஏராளமான வேத நூல்களின்(Vedic literature) அடிப்படையில் பார்த்தால் அனைத்தையும் படைத்தவனாக பிரம்மாவை நம்பிக்கொள்கின்றனர் என்பது ஒரு உண்மையாக நிலை கொள்கின்றது. ஆனால் பிறர் உறுதியாக கூறிக்கொள்கின்றனர். அதாவது ஆதிகாரணமும் அனைத்தையும் படைப்பதற்கான மூலகாரணமும் விஷ்ணுவே ஆவார். ஆகவே அந்நம்பிக்கைப்படி இவ்வுலகைப் படைத்திருப்பதற்கும் அது தொடர்ந்து செயல்படுவதற்கும் அது நிலை நிற்பதற்கும் காரணம் விஷ்ணுவே ஆவார் என்று மட்டுமின்றி அதன் முடிவு கூட விஷ்ணு வழியாகவே நிகழும் என கூறி அனைத்தையும் படைத்ததன் உரிமை விஷ்ணுவுக்கே அளிக்கப்பட்டிருக்கின்றது.

பாகவத புராணத்தில் காணும் ஒரு கதை நமக்கு வழங்கி கொள்ளும் செய்தி என்னவென்றால், சரஸ்வதி நதியின் அருகில் முனிவர்கள் ஒரு யாகத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்நேரம் அம்முனிவர்கள் மத்தியில் “மும்மூர்த்திகளில் எவர் சிறந்தவர்” என்ற ஒரு கருத்து வேறுபாடு நிகழ்ந்தது. இந்த கருத்து வேறுபாட்டிற்கு சரியான தீர்வுகாண பிரம்மபுத்திரனாகிய பர்ஹுவை சொர்க்கத்தில் நியமித்தனர். அவர் முதலில் தன் தந்தையாகிய பிரம்மாவின் அவையில் பிரவேசித்தார். சாதாரணமாக வழங்க வேண்டிய மரியாதையைக் கூட வழங்காமல் அவையில் நுழைந்த பர்ஹுவின் செயல்கள் பிரம்மாவை கோபத்திற்கு ஆளாக்கிகொண்டது. மரியாதையற்ற, மிக கௌரவம் வாய்ந்த குற்றம் தன் மகன் செய்திருக்கின்றான். ஆனால் பிரம்மன் தன் கோபத்தை குறைத்து கொண்டு தன் மகன் பர்ஹுவிற்கு சிறிய தண்டனை வழங்கி கொள்ளவும் செய்தார். அல்லாவிட்டால் படைத்தவனிடமே அவமரியாதை காட்டிய அவர் கடினமான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டிருப்பார். பிறகு பர்ஹு சிவபெருமானின் இராஜஅவையில் சென்றார். சிவபெருமானுக்கு முத்தம் வழங்கிக்கொள்ள அவர் முயற்சித்தார். ஆனால் அங்கிருந்த ரிஷி அவரை பின்திருப்பிக்கொண்டார். அந்நேரத்தில் சிவபெருமான் திரிசூலமும் கரங்களிலெடுத்து மிக கோபம் நிறைந்த நிலையிலாகயிருந்தார். ஆனால் சிவபெருமானின் மனைவியாகிய அன்னை பார்வதிதேவி, நேரத்திற்கு ஏற்றவாறு செயல்பட்டதன் மூலம் அதாவது தன் கணவரின் கால்களில் வீழ்ந்து முற்றிலும் தீவிர உணர்ச்சியுடன் மன்றாடிக்கொண்டதால் சிவபெருமானுக்கு தன் கோபத்தை அடக்கிகொள்ள முடிந்தது. அப்படி அவர் தப்பிக்கொண்டார்.

பர்ஹுவின் மோசமான பருமாற்றத்திற்கு சிவபெருமானிடமிருந்து மீட்சியை பெற்ற பிறகு பர்ஹு விஷ்ணுவின் அவையில் நுழைந்தார். அங்கு விஷ்ணு தன்

பிரிய மனைவி இலட்சுமிதேவியின் மடியில் தலை வைத்து தூங்கிக் கொண்டிருந்தார். பர்ஹூ அத்தம்பதியரின் அருகாமையில் சென்றபின் விஷ்ணுவின் நெஞ்சில் கால்களால் மிதித்தார். அதன் விளைவாக விஷ்ணு கண்விழித்துக் கொண்டார். மட்டுமின்றி எழும்பி தன்னை வேதனைக்கு ஆளாக்கிய பர்ஹூவின் காலருகில் மதிப்பு செலுத்துமாறு நின்றார். அத்தோடு பர்ஹூவை வரவேற்று அமர்ந்து கொள்ளுமாறு எளிமையுடன் கேட்டுக்கொண்டார். என்று மட்டுமின்றி தன் தவறு அறியாமை மூலம் நிகழ்ந்ததென்றும் மன்னிப்பு அளிக்க வேண்டுமென்றும் விஷ்ணு மன்றாடினார். ஆனால் அந்நேரம் பர்ஹூ விஷ்ணுவிடம் நான் இறைவனையே மிதித்த மிக பெரிய குற்றம் செய்திருக்கின்றேன் என கூறினார். அப்பொழுது விஷ்ணு என்னை மிதித்ததன் காரணம் உங்களின் கால்களுக்கு வேதனை வந்திருக்கலாம் என கூறி அவரின் கால்களை தடவி கொடுக்கவும் மன்னிப்பு கேட்கவும் செய்ததோடு புண்ணியாத்மாவாகிய ஒருவர் என் நெஞ்சில் மிதித்ததால் இன்று நான் கண்ணியமிக்கவனாக மாறியிருக்கின்றேன் என் பாவங்களின் தூசிகள் யாவும் அந்த கால்கள் வழியாக நீங்கிக் கொண்டது என விஷ்ணு கூறிக்கொண்டார். பாகவத புராணம் மேலும் கூறிக்கொள்கின்றது விஷ்ணு தன் பேச்சை முடித்துக்கொண்ட பிறகு, பர்ஹூவின் மனதுக்கு அது மிக அதிகமான வேதனையை அளித்ததோடு எந்த பதிலும் கூறயியலாத நிலைக்கு அவரை அது ஆளாக்கி கொள்ளவும் செய்தது.

தன் கண்களிலிருந்து வீழ்ந்த கண்ணீரை துடைத்தவாறு விஷ்ணு அவையிலிருந்து வெளியேறிக்கொண்டார். அந்த நிகழ்வுக்கு பிறகு பர்ஹூ மண்ணுலகில் திரும்ப வந்து தன் அனுபவங்களையாவும் அம்முனிவர்களிடம் பங்கு வைத்துக் கொண்டார். அப்பொழுது அத்துறவிகள் அனைத்தும் ஒருமனதாக மும்மூர்த்திகளில் சிறந்தவன் விஷ்ணுவே ஆவார் என ஒத்துக்கொள்ளவும் செய்தனர். காரணம் அன்னார்(விஷ்ணு) தன் தவறான உடல் விருப்பங்களுக்கு வசப்பட்டுக் கொள்ளாமல் செயல்பட்டார் என்பதே தான்.

சிவபெருமான் விஷ்ணுவிற்கு முன் தோல்வியை தழுவிக்கொண்ட ஒரு கதையும் அதில் விளக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ எனும் அழகிய ஒரு பெண் கன்னிகை ஒரு முறை சிவபெருமானுக்கு காட்சியளித்தாள். அந்த பெண் பிற்காலத்தில் விஷ்ணுவுக்கு மனைவியாகி கொண்டாள். சிவனுக்கு காட்சியளித்த அந்த பெண் கன்னிகை மீது அவர் மோகம் கொண்டு அவளை தனக்குரியதாக்கிட முயற்சித்தார். ஆனால் அவள் அவரிலிருந்து பின் வாங்கி கொண்டாள். அவளின் அச்செயல் சிவபெருமானை முற்றிலும் கோபத்திற்கு ஆளாக்கச் செய்தது. அதை தொடர்ந்து அவளை காப்பாற்றிக்கொள்ள விஷ்ணு ஒரு அழகியின் வேடத்தில் தோன்றினார். அது வழியாக சிவபெருமானுடையவும் அவருடைய பூதகணங்களுடையவும் கவனத்தை தன் பால் திரும்பச்செய்து அவர்களை யாவும் கீழ்ப்பணியவைக்கவும் செய்தார்.

வேத நூல்களில் காணும் வேறொரு கதையிலும் சிவபெருமானை விட விஷ்ணு சிறப்பு பெற்றவர் என தெளிவுபடுகின்றது. சிவபெருமானின் வார்த்தைகள்

வாயிலாக அது உறுதியாகின்றது. பரம புராணத்தில்(padama Purana) சிவபெருமான் விஷ்ணுவை அழைப்பது **“பரம் சத்தியாமா”** என காணலாம். அதாவது **பரமாத்மா**. அதுபோன்று **பரபிரம்மா** அதாவது **மகத்துவமுடையவனாகிய பிரம்மா** மேலும் **நாராயணா** அதாவது **“பரம உண்மை”.** ஆரம்பமில்லாதவனும், முடிவில்லாதவனும், அனைத்தையும் காண்கின்றவனும், எல்லாவற்றிலும் நிலை கொள்பவனும் ஆகிய பரம உண்மை.

பகவத் கீதையின் நாயகனாகிய ஸ்ரீ கிருஷ்ணன்,(அலை) விஷ்ணுவின் அவதாரமாக நம்பிக்கை கொள்ளப்படுகின்றது. துவாபரயுகத்தில் 3-ம் கட்டத்தில்(The Third age of Dvapara – yuga) அன்னாரின் அவதாரமென்று நம்பிக்கை. நிச்சயமாக செயல்வடிவில் சிந்தித்துக்கொண்டால், இயற்கைக்கு ஏற்றவாறு நேர்மையான நோக்கத்தில் கூறினால் இவ்வகை விஷயங்களுடன் இறைவனை இணைக்கச் செய்வது சரியானதல்ல. இறைவன் உண்மையானவனாகியிருக்கின்றான். ஆகையால் அவன் மனித பலவீனங்களுக்கு அப்பார்பட்டவனாகவும் இருக்க வேண்டும்.

**இறைவன் ஒரு பொழுதும் ஒரு பெண்ணுமாக தொடர்புடையவனல்ல. மனைவியுடனான வாழ்க்கையும் பிள்ளைகளை உற்பத்தி செய்வதும் இறைவனுக்கு சேர்ந்தல்ல. இறைவன் என்பது உண்மையான ஒன்றாகும். அவன் மிக உன்னதமானவன். அவன் ஒரு பொழுதும் தூங்குபவனல்ல. அவன் மிக தூய்மையானவன். மனிதர்களுக்கும் மற்றும் உயிரினங்களுக்கு தேவைப்படுகின்ற எதுவும் அவனுக்கு தேவையில்லை.** அப்போது நாம் மேல் கூறிக்கொண்ட நபர்கள் யார்? அவர்கள், இறைவனை அஞ்சி வாழ்ந்த நேர்மறையாளராகிய நபர்களாகலாம். பிற்காலம் அறிவின்றி மக்கள் அவர்களை தெய்வங்கள் என கூறிக்கொண்டதாகலாம். அவர்கள் நல்லவர்களாகயிருக்கலாம். சிவபெருமானின் விஷயத்தில் கூறியிருப்பதைப் போன்று, இவையாவும் நான் கூறியது வாயிலாக ஏதேனும் ஒரு ஹிந்து நண்பரின் உணர்ச்சியை காயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு முற்றிலுமில்லை. மாறாக அவர்களுக்கு நேர்வழியினை சுட்டிக்காட்டுதல் மட்டுமே எனது நோக்கம். அவர்கள் சிந்தித்துக் கொள்வதற்காக இதை சமர்பித்துக் கொள்கின்றேன். இந்த பிரபஞ்சத்தையோ அதில் வாழும் மனிதர்களையோ படைக்க இவ்வகை தெய்வங்களுக்கு ஒருபோதும் இயலாது. ஆனால் உண்மையில் ஒரேயொரு இறைவன் இருக்கின்றான். அவன் எல்லா வகைப்பட்ட உடல் விருப்பங்களுக்கும் அதை போன்றே மனித பலவீனங்களுக்கும் அப்பார்பட்டவனாக நிலைகொள்பவன் ஆவான்.

எனது இன்றைய வெள்ளிக்கிழமை பேருரையினை நிறைவு செய்கின்றேன்.

**இறைத்தூதராகிய ஸ்ரீ கிருஷ்ணன்(அலை) மின் சில வார்த்தைகளை உரைக்கின்றேன்.**

1. **“தஸ்மாத ஞானசம்பூதம்**

**ஹிர்த்ஸ்தம் ஞானசினாத்மனே:**

**சித்தொய்னம் சம்சயம் யோகம்**

**ஆதிஷ்டோத்திஷ்ட பாரதா''**

**(அறியான்மையால் உள்ளத்தில் எழும்புகின்ற சந்தேகங்களை ஞானம் எனும் ஆயுதத்தால் அழித்து கொள்ள வேண்டும்.)**

**2. ''தாதவ்யா மிதி யாதனம்**
**தீய்தே நுபகாரிணே**
**தேசே காலே ச பாத்திரே இச்ச**
**தத்தானம் சாத்திகம் ஸ்மிர்தம்''**

**(கொடுத்தே ஆக வேண்டும் என்ற காரணத்தினால் திரும்பக் கைமாறு செய்ய முடியாதவராக இருப்பினும் சரியான நபருக்கு சரியான நேரத்தில்(சரியான தேசத்தில் வைத்து சரியான நேரத்தில்) கொடுக்கப்படும் கொடை நற்குணத்தின் தன்மை (சத்வ குணம்) கொண்டது என சொல்லப்படுகின்றது.)** (பகவத் கீதை 17 : 20)

திருக்குர் ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**அல்லாஹ்வின் பாதையில் எவர் தங்களின் செல்வத்தை செலவிட்ட பின்னால் அதைத் தொடர்ந்து அதைச் சொல்லி காண்பிக்காமலும் அல்லது வேறு விதமான நோவினை செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களுக்கு அதற்குரிய நற்கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. இன்னும் அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை. அவர்கள் துக்கமும் அடையமாட்டார்கள் (2 : 263)**

ஆகவே புரிந்து கொள்ள முயற்சியுங்கள் விஷ்ணுவும் கிருஷ்ணனும் இறைவனுடைய படைப்புகளாகும். நிச்சயமாக அவர்கள் தெய்வங்களல்ல. மாறாக அவர்கள் நற்குணமுடைய பக்தர்களும் இறைத்தூதர்களும் ஆவார்கள். ஆகவே என் ஹிந்து சகோதரர்களிடமும் சகோதரிகளிடமும் எனக்கு கூறிக்கொள்ள வேண்டியது அதாவது நம் பந்தம் இறைவனிடம் மட்டுமாக இருக்க வேண்டும். அவன் உண்மையானவனும் மகத்துவமுடையவனும் ஆவான். ஒரே ஒரு இறைவன் மட்டுமே இருக்கின்றான். நாம் நிலைநிற்பதற்கு காரணமும் அவனே தான். நமக்கு தேவையானதை அனைத்தும் படைத்ததும் அந்த இறைவன் தான். நம் நலத்திற்காக, நம் முன்னேற்றத்திற்காக, நம் வெற்றிக்காக, இவையாவுக்கும் நாம் அடைக்கலம் கொள்வது அந்த இறைவனின் அருள்கொடைகளிலாகும். நம் பெற்றோர்கள், நம் பிள்ளைகள், நம் சகோதர சகோதரிகள், நம் மனைவிகள், கணவர்கள், நண்பர்கள், நம் மகத்துவங்கள், நம் பதவிகள், நம் தொழில், நம் உயிர்

இவை அனைத்தும் இறைவனை விட மேலானதல்ல. இவையாவும் இறைவனின் பரிசுகளாகும் இந்த உண்மையை நாம் உணர வேண்டும். அவன் மட்டுமே உண்மையான அருள்கொடையாளன். அல்ஹம்துலிலாஹ்!


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

AZIM AHMAD
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817